# மருதம் அகாடமி Youtube channel

**தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789**

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

HIGHER SECONDARY SECOND YEAR

## Unit 5 / கூட்டாளி சேர்ப்பு

## கணக்குப்பதிவியல்

### I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. மறுமதிபீட்டுக் கணக்கு ஒரு

(அ) சொத்து க/கு (ஆ) பெயரளவு க/கு

(இ) ஆள்சார் க/கு (ஈ) ஆள்சாரா க/கு

2. மறுமதிப்பீட்டில் சொத்துகளின் மதிப்பு உயர்வது

(அ) ஆதாயம் (ஆ) நட்டம்

(இ) செலவு (ஈ) இவற்றுள் எதுவுமில்லை

3. கூட்டாளி சேர்ப்பின் போது சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்யும் போது ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் யாருடைய முதல் கணக்கிற்கு மாற்றப்படுகிறது?

(அ) பழைய கூட்டாளிகள் (ஆ) புதிய கூட்டாளி

(இ) அனைத்து கூட்டாளிகள்

(ஈ) தியாகம் செய்த கூட்டாளிகள்

4. கூட்டாளியின் புதிய இலாபப்பகிர்வை விட பழைய இலாபப் பகிர்வு அதிகமாக இருந்தால் அவ்வேறுபாடு அழைக்கப்படுவது

(அ) முதல் விகிதம் (ஆ) தியாக விகிதம்

(இ) ஆதாய விகிதம் (ஈ) இவற்றுள் எதுவுமில்லை

5. கூட்டாளி சேர்ப்பின்போது புதிய கூட்டாளி நற்பெயருக்காக கொண்டு வரும் தொகை, யாருடைய முதல்கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்?

(அ) அனைத்து கூட்டாளிகள் (ஆ) பழைய கூட்டாளிகள்

(இ) புதிய கூட்டாளி (ஈ) தியாகம் செய்த கூட்டாளிகள்

6. கூட்டாளி சேர்ப்பு தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானதல்ல?

(அ) பொதுவாக கூட்டாளிகளின் பரஸ்பர உரிமைகள் மாறும்

(ஆ) முந்தைய ஆண்டுகளின் இலாபம் மற்றும் நட்டங்கள் பழைய கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்

(இ) கூட்டாண்மை நிறுவனமானது புதிய ஒப்பந்தத்தின் கீழ் மறு கட்டமைக்கப்படும்

(ஈ) ஏற்கனவே உள்ள ஒப்பந்தமானது முடிவுக்கு கொண்டு வரப்படாது

7. பட்டியல் I ஐ மற்றும் பட்டியல் II உடன் ஒப்பீடு செய்து சரியான விடையை கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான குறியீட்டை பயன்படுத்தி தெரிவு செய்யவும்.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (i) தியாக விகிதம் | 1. முதலீட்டு மாறுபடும் நிதி |
| (ii) பழைய இலாபப் பகிர்வு விகிதம் | 2. பகிர்ந்துதரா இலாபம் |
| (iii) மறுமதிப்பீட்டு கணக்கு | 3. நற்பெயர் |
| (iv) முதல் கணக்கு | 4. பதிவுறா பொறுப்பு |

(அ) 1 2 3 4 (ஆ) 3 2 4 1

(இ) 4 3 2 1 (ஈ) 3 1 2 4

8. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்

(அ) மறுமதிப்பீட்டு இலாபம்

(ஆ) பகிர்ந்தளிக்கப்படாத இலாபம்

(இ) புதிய கூட்டாளி கொண்டு வந்த நற்பெயர்

ஈ) முதலீட்டு மாறுபடும் நிதி

9. ஜேம்ஸ் மற்றும் கமல் இலாப நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். அவர்கள் சுனில் என்பவரை 1/5 இலாப பங்கிற்கு கூட்டாளியாக சேர்த்துக் கொண்டனர். தியாக விகிதத்தை கணக்கிடவும்.

(அ) 1:3 (ஆ) 3:1 (இ) 5:3 (ஈ) 3:5

10. பாலாஜி மற்றும் கமலேஷ் கூட்டாளிகள். இலாப நட்டங்களை 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொண்டனர். அவர்கள் யோகேஷ் என்பவரை கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர். பாலாஜி, கமலேஷ் மற்றும் யோகேஷின் புதிய இலாப் பகிர்வு விகிதம் 3:1:1. பாலாஜி மற்றும் கமலேஷின் தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.

(அ) 1:3 (ஆ) 3:1 (இ) 2:1 (ஈ) 1:2

### மிகக் குறுகிய வினாக்கள்

1. சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்தல் என்றால் என்ன?

2. புதிய கூட்டாளி சேர்க்கையின்போது, பகிர்ந்துதரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் எவ்வாறு கூட்டாளிகளிக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது?

5. பின்வருவனவற்றுள் மறுமதிப்பீட்டு கணக்கில் பற்று அல்லது வரவு வைக்கப்படுவதைத் தரவும்.

(அ) சொத்தின் மீதான தேய்மானம்

(ஆ) பதிவுறா பொறுப்புகள்

(இ) கொடுபடவேண்டிய செலவிற்கான ஒதுக்கீடு

(ஈ) சொத்தின் மீதான மதிப்பேற்றம்

### குறுகிய வினாக்கள்

1. கூட்டாளி சேர்ப்பின் போது மேற்கொள்ள வேண்டிய சரிகட்டுதல்கள் யாவை?

3. நற்பெயருக்கான கணக்கியல் செயல்முறை குறித்து சிறு குறிப்பு தரவும்.

(அ) பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் காப்புகளை மாற்றுவதற்கு

குறிப்பேட்டுப் பதிவு

| நாள் | விவரம் | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | இலாப நட்டப் பகிர்வு க/கு ப | | xxx | |
| | பொதுக்காப்பு க/கு ப | | xxx | |
| | காப்புநிதி க/கு ப | | xxx | |
| | தொழிலாளர் ஈட்டு நிதி க/கு ப | | xxx | |
| | முதலீட்டு மாறுபடும் நிதி க/கு ப | | xxx | |
| | பழைய கூட்டாளிகளின் முதல்/ நடப்பு க/கு (பழைய இலாபவிகிதத்தில்) | | | xxx |

(அ) பகிர்ந்து தரா நட்டம் மாற்றுவதற்கு

குறிப்பேட்டுப் பதிவு

| நாள் | விவரம் | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | கூட்டாளிகளின் முதல் / நடப்பு க/கு ப | | xxx | |
| | இலாப நட்ட க/கு (பழைய இலாப விகிதத்தில்) | | | xxx |

### எடுத்துக்காட்டு 2

கவிதா மற்றும் இராதா எனும் கூட்டாளிகள் முறையே 4:3 எனும் விகிதத்தில் இலாபநட்டம் பகிர்ந்து வந்தனர். 1.1.2019 அன்று அவர்கள் தீபா என்பவரை கூட்டாளியாக சேர்த்தனர். அந்நாளில் அவர்களுடைய இருப்புநிலைக் குறிப்பில் இலாப நட்டக் கணக்கு பற்று இருப்பாக ₹ 70,000 பகிர்ந்து தரா நட்டமாக சொத்துகள் பக்கத்தில் காட்டியது. கூட்டாளி சேர்ப்பின் போது பகிர்ந்து தரா நட்டத்தை மாற்றுவதற்கு குறிப்பேட்டுப் பதிவு தரவும்.

சொத்துகளையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்யும் போது பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகள் செய்யப்படுகின்றன.

| நாள் | விவரம் | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | 1. சொத்துகளின் மதிப்பு அதிகரிக்கும் போது | | | |
| | குறிப்பிட்ட சொத்து க/கு ப | | xxx | |
| | மறுமதிப்பீட்டு க/கு | | | xxx |
| | 2. சொத்துகளின் மதிப்பு குறையும் போது | | | |
| | மறுமதிப்பீட்டு க/கு ப | | xxx | |
| | குறிப்பிட்ட சொத்து க/கு | | | xxx |
| | 3. பொறுப்புகளின் மதிப்பு அதிகரிக்கும் போது | | | |
| | மறுமதிப்பீட்டு க/கு ப | | xxx | |
| | குறிப்பிட்ட பொறுப்பு க/கு | | | xxx |
| | 4. பொறுப்புகளின் மதிப்பு குறையும் போது | | | |
| | குறிப்பிட்ட பொறுப்பு க/கு ப | | xxx | |
| | மறுமதிப்பீட்டு க/கு | | | xxx |
| | 5. ஏட்டில் பதிவு செய்யாத சொத்துகளை பதிவு செய்யும் போது | | | |
| | குறிப்பிட்ட சொத்து க/கு ப | | xxx | |
| | மறுமதிப்பீட்டு க/கு | | | xxx |
| | 6. ஏட்டில் பதிவு செய்யாத பொறுப்புகளை பதிவு செய்யும் போது | | | |
| | மறுமதிப்பீட்டு க/கு ப | | xxx | |
| | குறிப்பிட்ட பொறுப்பு க/கு | | | xxx |
| | 7. மறுமதிப்பீட்டு கணக்கின் இருப்பினை மாற்ற | | | |
| | (அ) மறுமதிப்பீட்டு இலாபமாக இருந்தால் | | | |
| | மறுமதிப்பீட்டு க/கு ப | | xxx | |
| | பழைய கூட்டாளிகளின் முதல் க/கு (பழைய விகிதத்தில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக) | | | xxx |
| | (ஆ) மறுமதிப்பீட்டு நட்டமாக இருந்தால் | | | |
| | பழைய கூட்டாளிகளின் முதல் க/கு ப (பழைய விகிதத்தில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக) | | xxx | |
| | மறுமதிப்பீட்டு க/கு | | | xxx |

மறுமதிப்பீட்டுக் கணக்கின் படிவம்

ப மறுமதிப்பீட்டுக் கணக்கு வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| குறிப்பிட்ட சொத்து க/கு (நிகர குறைவு) | xxx | குறிப்பிட்ட சொத்து க/கு (நிகர அதிகரிப்பு) | xxx |
| குறிப்பிட்ட பொறுப்பு க/கு (நிகர அதிகரிப்பு) | xxx | குறிப்பிட்ட பொறுப்பு க/கு (நிகர குறைவு) | xxx |
| பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கு (மறுமதிப்பீட்டு இலாபம் பழைய விகிதத்தில் பகிர்ந்தளித்தது) * | xxx | பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கு (மறுமதிப்பீட்டு நட்டம் பழைய விகிதத்தில் பகிர்ந்தளித்தது) * | xxx |
| | xxx | | xxx |

* இது மறுமதிப்பீட்டு இலாபமாகவோ அல்லது நட்டமாகவோ இருக்கலாம்.

### எடுத்துக்காட்டு 5

ஸ்ரீராம் மற்றும் ராஜ் எனும் கூட்டாளிகள் முறையே 2:1 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 1.4.2017 நெல்சன் என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்தனர். கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(i) சரக்கிருப்பு மதிப்பை ₹ 5,000 உயர்த்த வேண்டும்
(ii) ஏடுகளில் பதிவு பெறாமலுள்ள முதலீடுகள் ₹ 7,000 தற்போது பதிவு செய்தல் வேண்டும்
(iii) அலுவலக சாதனங்கள் மதிப்பை ₹ 10,000 குறைக்க வேண்டும்
(iv) கொடுபடாமலுள்ள கூலி ₹ 9,500 க்கு வகை செய்யவேண்டும்

குறிப்பேடு பதிவுகள் தந்து மறுமதிப்பீடு கணக்கு தயாரிக்கவும்.

### எடுத்துக்காட்டு 6

ரகு மற்றும் சாம் எனும் கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 2017 மார்ச் 31 அன்று அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | இயந்திரம் | | 30,000 |
| ரகு | 40,000 | | அறைகலன் | | 10,000 |
| சாம் | 30,000 | 70,000 | சரக்கிருப்பு | | 10,000 |
| பற்பல கடனீந்தோர் | | 30,000 | கடனாளிகள் | 21,000 | |
| | | | கழிக்க: வாரா ஐயக்கடன் ஒதுக்கு | 1,000 | 20,000 |
| | | | வங்கி | | 30,000 |
| | | 1,00,000 | | | 1,00,000 |

1.4.2017 அன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பிரகாஷ் என்பவரை கூட்டாண்மையில் சேர்த்தனர்.

(அ) பிரகாஷ் ₹ 10,000 முதல் கொண்டு வருவது
(ஆ) இயந்திரம் ₹ 24,000 என மதிப்பிடப்பட்டது
(இ) அறைகலனின் மதிப்பில் ₹ 3,000 குறைப்பது
(ஈ) வாரா ஐயக்கடன் ஒதுக்கை ₹ 3,000 என அதிகரிப்பது
(உ) ஏடுகளில் பதிவு பெறாமலுள்ள கணக்குகளின் மூலம் பெறவேண்டியவைகள் மதிப்பு ₹ 1,000 பதிவு செய்தல்

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டு கணக்கு மற்றும் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

### எடுத்துக்காட்டு 12

சுரேஷ் மற்றும் தினேஷ் என்ற இரு கூட்டாளிகள் 3:2 விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் இரமேஷ் என்பவரை கூட்டாளியாகச் சேர்த்தனர். சுரேஷ் என்பவர் தன்பங்கில் 1/5 பங்கும், தினேஷ் என்பவர் தன் பங்கில் 2/5 பங்கும் தியாகம் செய்கின்றனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

### எடுத்துக்காட்டு 16

விமல் மற்றும் ஆதி என்ற இரு கூட்டாளிகள் 2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் ஜெயம் என்பவரை 1/4 பங்குக்கு கூட்டாளியாகச் சேர்த்தனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

### எடுத்துக்காட்டு 17

அனில், சுனில் மற்றும் ஹரி என்ற மூன்று கூட்டாளிகள் 4:3:3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் ராஜா என்பவரை 20% இலாபத்திற்கு கூட்டாளியாகச் சேர்த்தனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

(i) நற்பெயர் ரொக்கமாக கொண்டு வந்து, பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கில் வரவு செய்யும்போது:

| நாள் | விவரம் | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | ரொக்கம் / வங்கி க/கு ப | | xxx | |
| | பழைய கூட்டாளிகளின் முதல் / நடப்பு க/கு (தியாக விகிதப்படி) | | | xxx |

(ii) நற்பெயர் சொத்துகளாக கொண்டு வரப்பட்டு பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கில் வரவு செய்யும்போது:

| நாள் | விவரம் | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | குறிப்பிட்ட சொத்து க/கு ப | | xxx | |
| | பழைய கூட்டாளிகளின் முதல் / நடப்பு க/கு (தியாக விகிதப்படி) | | | xxx |

(iii) நற்பெயருக்காக பெற்ற ரொக்கம், பழைய கூட்டாளிகளால் எடுத்துக்கொள்ளப்படும் போது:

| நாள் | விவரம் | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | பழைய கூட்டாளிகளின் முதல் / நடப்பு க/கு ப | | xxx | |
| | ரொக்கம் / வங்கி க/கு | | | xxx |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# மருதம் அகாடமி Youtube channel

## தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy


எடுத்துக்காட்டு 20

வாசு மற்றும் தேவி இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 3:2 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் நிலா என்பவரை 1/4 இலாப பங்கிற்கு கூட்டாண்மையில் சேர்க்கின்றனர். நிலா தன்னுடைய பங்காக ₹ 3,000 நற்பெயருக்கென செலுத்துகிறார். அவர்களின் புதிய இலாபப்பகிர்வு விகிதம் 3:3:2. நிலைமுதல் முறையில் கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன எனக்கொண்டு, தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளை உருவாக்கவும்.

எடுத்துக்காட்டு 22

அரவிந்த் மற்றும் பாலாஜி இருவரும் 3:2 விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வரும் கூட்டாளிகள். அவர்கள் அனிருத் என்பவரை புதிய கூட்டாளியாகச் சேர்க்க அனுமதித்தனர். புதிய இலாபப்பகிர்வு விகிதமாக 1:1:1 என்பதை மூவரும் ஒப்புக் கொள்கின்றனர். அனிருத் செலுத்த வேண்டிய நற்பெயர் மதிப்பு ₹ 20,000 என்று மதிப்பிடப்படுகிறது. அதில், அவர் ₹ 12,000 ரொக்கம் செலுத்துகிறார். மாறுபடும் முதல் முறையில் கணக்குகள் உள்ளதெனக் கொண்டு நற்பெயருக்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

எடுத்துக்காட்டு 26

அமீர் மற்றும் ராஜா என்ற கூட்டாளிகளின் இலாபப்பகிர்வு விகிதம் 3:2. 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | இயந்திரம் | 60,000 |
| அமீர் | 80,000 | | அறைகலன் | 40,000 |
| இராஜா | 70,000 | 1,50,000 | கடனாளிகள் | 30,000 |
| காப்பு நிதி | | 15,000 | சரக்கிருப்பு | 10,000 |
| கடனீந்தோர் | | 35,000 | முன்கூட்டிச் செலுத்திய காப்பீடு | 40,000 |
| | | | வங்கி ரொக்கம் | 20,000 |
| | | 2,00,000 | | 2,00,000 |

ரோஹித் என்பவர் புதிய கூட்டாளியாகச் சேர்க்கப்பட்டார். அவர் எதிர்கால இலாபத்தில் தன்னுடைய 1/5 பங்கிற்காக ₹ 30,000 முதலாகக் கொண்டு வந்தார். அவர் நற்பெயரில் தன்னுடைய பங்காக ₹ 10,000 கொண்டு வந்தார்.

மறுமதிப்பீடு பின்வருமாறு செய்யப்பட்டது

(i) சரக்கிருப்பின் மதிப்பு ₹ 14,000 ஆக அதிகரிக்கப்பட்டது.

(ii) அறைகலன் மீது 5% தேய்மானம் நீக்கப்படவேண்டும்.

(iii) இயந்திரம் மதிப்பு ₹ 80,000 ஆக மறுமதிப்பீடு செய்யப்பட்டது.

தேவையான பேரேட்டு கணக்குகள் தயார் செய்து சேர்ப்பிற்கு பின் உள்ள இருப்புநிலைக் குறிப்பினைத் தயார் செய்யவும்.

4. ஹரி, மாதவன் மற்றும் கேசவன் ஆகிய கூட்டாளிகள் இலாப நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2017, ஏப்ரல் 1 அன்று வான்மதி புதிய கூட்டாளியாகச் சேர்த்தபின் அவர்களின் இலாப விகிதம் 4:3:2:1 என முடிவு செய்யப்பட்டது. பின்வரும் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்:

(அ) வளாகத்தின் மதிப்பு ₹ 60,000 அதிகரிக்கப்பட்டது

(ஆ) சரக்கிருப்பு மீது ₹ 5,000, அறைகலன் மீது ₹ 2,000, இயந்திரம் மீது ₹ 2,500 தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.

(இ) கொடுபட வேண்டிய பொறுப்பு ₹ 500 உருவாக்கப்பட வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து, மறுமதிப்பீட்டுக் கணக்கினை தயார் செய்யவும்.

8. பிரவீணா மற்றும் தான்யா என்ற இரு கூட்டாளிகள் 7:3 என்ற இலாப விகிதத்தில் இலாபத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் மாலினி என்பவரை கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர். பிரவீணா, தான்யா மற்றும் மாலினி அவர்களின் புதிய இலாப விகிதம் 5:2:3. தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.

13. பிரேமா மற்றும் சந்திரா 5:3 விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வருகின்றனர். ஹேமா என்பவர் கூட்டாளியாக சேருகிறார். பிரேமா தன் பங்கில் 1/8 பாகமும், சந்திரா தன் பங்கில் 1/8 பாகமும் ஹேமாவிற்காக தியாகம் செய்கின்றனர். புதிய இலாபப் பகிர்வு விகிதத்தையும் மற்றும் தியாக விகிதத்தையும் கணக்கிடவும்.

17. அம்பிகா, தரணி மற்றும் பத்மா மூவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அம்மூவரும் 5:3:2 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்கள் இரம்யா என்பவரை 25% இலாபம் தருவதாக கூட்டாண்மையில் அனுமதித்தனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கண்டறியவும்.

21. அனு மற்றும் அருள் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 4:1 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் மனோ என்பவரை 2/5 இலாப விகிதத்தில் நிறுவனத்தில் சேர்க்க முடிவு செய்கின்றனர். சேர்க்கையின் போது நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பு ₹ 25,000 என்று மதிப்பிடப்படுகிறது. மனோ தன்னுடைய பங்கிற்கான நற்பெயர் மதிப்பிற்கான தொகையைக் கொண்டுவர முடியவில்லை. மாறுபடும் முதல் முறையினை அடிப்படையாக கொண்டு நற்பெயர் சரிக்கட்டுவதற்கு தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

23. சாம் மற்றும் ஜோஸ் என்னும் கூட்டாளிகள் 3:2 என்னும் விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 2018, ஏப்ரல் 1 அன்று ஜோயல் என்பவரை கூட்டாளியாக சேர்த்துக்கொண்டனர். ஜோயல் கூட்டாண்மையில் சேர்ந்த அன்று நிறுவன ஏடுகளில் நற்பெயர் ₹ 30,000 ஆக இருந்தது. மாறுபடும் முதல் முறையில் கணக்குகள் பராமரிக்கப்படுவதாகக் கருதி கூட்டாளிகளின் பின்வரும் முடிவுகளின்படி குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(அ) ஏட்டில் உள்ள நற்பெயர் தொகை முழுவதையும் போக்கெழுதுவது

(ஆ) ஏட்டில் உள்ள நற்பெயரில் ₹ 20,000–ஐ போக்கெழுதுவது

27. அன்பு மற்றும் சங்கர் என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 3:2 எனும் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | கணிப்பொறி | 40,000 |
| அன்பு | 4,00,000 | | வாகனம் | 1,60,000 |
| சங்கர் | 3,00,000 | 7,00,000 | சரக்கிருப்பு | 4,00,000 |
| இலாப நட்ட க/கு | | 1,20,000 | கடனாளிகள் | 3,60,000 |
| கடனீந்தோர் | | 1,20,000 | வங்கி ரொக்கம் | 40,000 |
| தொழிலாளர் ஈட்டு நிதி | | 60,000 | | |
| | | 10,00,000 | | 10,00,000 |

பின்வரும் விவரங்கள் அடிப்படையில் இராஜேஷ் என்பவர் 1/5 பங்கிற்கு கூட்டாளியாகச் சேர்க்கப்பட்டார்.

(i) நிறுவனத்தின் நற்பெயர் ₹ 75,000 என மதிப்பிடப்பட்டது. இராஜேஷ் நற்பெயரில் தன்னுடைய பங்கினை ரொக்கமாகக் கொண்டு வந்தார்.

(ii) இராஜேஷ் ₹ 1,50,000 முதலாகக் கொண்டு வந்தார்.

(iii) வாகனம் ₹ 2,00,000, சரக்கிருப்பு ₹ 3,80,000, கடனாளிகள் ₹ 3,50,000 என மதிப்பிடப்பட்டது.

(iv) எதிர்பார்க்கப்படும் தொழிலாளர் ஈட்டு நிதி மீதான கோரிக்கை ₹ 10,000.

(v) பதிவுறா முதலீடு ₹ 5,000 கணக்கில் கொண்டுவரப்பட்டது.

மறுமதிப்பீடு கணக்கு, முதல் கணக்கு மற்றும் இராஜேஷின் சேர்ப்பிற்கு பின்வரும் இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

உங்களுக்குத் தெரியுமா?

**முதலீட்டு மாறுபடும் நிதி**

முதலீடுகளின் சந்தை மதிப்பில் ஏற்படும் இறக்கத்தை சரிக்கட்டுவதற்காக முதலீட்டு மாறுபடும் நிதி இலாபத்திலிருந்து உருவாக்கப்படுகிறது. முதலீடுகளின் சந்தை மதிப்பு, ஏட்டு மதிப்பிற்கு சமமாகவோ அல்லது அதிகமாகவோ இருப்பின், முதலீட்டு மாறுபடும் நிதி முழுவதும் பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு பழைய இலாப விகிதத்தில் மாற்றப்படுகிறது. முதலீடுகளின் சந்தை மதிப்பு, ஏட்டு மதிப்பிற்கு குறைவாக இருப்பின், அதன் வேறுபாடு முதலீட்டு மாறுபடும் நிதியிலிருந்து கழிக்கப்பட்டு, மீதமுள்ள தொகை பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு பழைய இலாப விகிதத்தில் மாற்றப்படுகிறது.

### 5.5.2 தியாக விகிதம்

பழைய கூட்டாளிகள் புதிய கூட்டாளிக்கு அவர்கள் இலாபத்தின் ஒரு பகுதியினை தியாகம் செய்யலாம். இந்த தியாகத்தை அனைத்துக் கூட்டாளிகள் அல்லது சில கூட்டாளிகள் செய்யலாம். தியாக விகிதம் என்பது பழைய கூட்டாளிகள் தங்கள் இலாபத்தில் ஒரு விகிதத்தை புதிய கூட்டாளிக்கு ஆதரவாக தியாகம் செய்வது அல்லது விட்டுக் கொடுப்பது ஆகும். இந்த தியாக விகிதம் கணக்கிடுவதன் நோக்கம் புதிய கூட்டாளி கொண்டு வரும் நற்பெயரைப் பகிர்ந்து கொள்வதாகும். புதிய பங்கை பழைய பங்கிலிருந்து கழிப்பதன் மூலம் தியாகப் பங்கு கணக்கிடப்படுகிறது.

தியாகப் பங்கு = பழைய பங்கு – புதிய பங்கு

தியாக விகிதம் = பழைய கூட்டாளிகள் தியாகம் செய்த பங்கின் விகிதம்

புதிய கூட்டாளியின் பங்கு என்பது பழைய கூட்டாளிகளால் தியாகம் செய்யப்பட்ட பங்குகளின் கூட்டுத்தொகை ஆகும்.

### 5.6.1. நற்பெயருக்கான கணக்கியல் செயல்முறைகள்

கூட்டாளி சேர்க்கையின் போது நற்பெயருக்கான கணக்கியல் செயல்முறைகள் கீழே விவாதிக்கப்பட்டுள்ளது:

1. புதிய கூட்டாளி நற்பெயருக்காக ரொக்கம் அல்லது சொத்து கொண்டு வரும் போது
2. புதிய கூட்டாளி நற்பெயருக்கென ரொக்கம் அல்லது சொத்து ஏதும் கொண்டு வராத போது
3. புதிய கூட்டாளி நற்பெயருக்கான ஒரு பகுதியை மட்டும் ரொக்கம் அல்லது சொத்துகளாக கொண்டு வரும் போது.
4. பழைய நற்பெயர்

உங்களுக்குத் தெரியுமா?

புதிய கூட்டாளி நற்பெயருக்கான தொகையை பழையக் கூட்ட்டாளிகளிக்கு தனிப்பட்ட முறையில் வழங்கும் போது, கூட்டாண்மை நிறுவன ஏடுகளில் பதிவுகள் ஏதும் செய்யப்படுவதில்லை.

மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

www.Padasalai.Net

மருதம் அகாடமி YouTube Channel 9659838789